மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் நானும் பேசியபொழுது பிறகு இதைப் பற்றிச் சொல்கிறேன் என்று சொன்னேன். ஆய்வில் இருக்கிறது, நாளையோ மறுநாளோ சொல்கிறேன். இது முற்றுப்புள்ளியாக வில்லை.

(3) உரிமைப் பிரச்சினை.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேடு மீது எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை மீது மாண்புமிகு பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி அன்று, திரு. உமாநாத், திரு. ஆர். கிருஷ்ணன், திரு. வி. ஆர். ஜெயராமன் ஆகியோர், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை மீது, அப் பத்திரிகை தனது 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் தேதியிட்ட இதழில் உறுப்பினர்களைப் பற்றி வெளியிட்டுள்ள ஒரு செய்தியின் மீது உரிமைப் பிரச்சினையை அவையில் எழுப்பியபோது அப்பத்திரி கையின் விளக்கத்தைக் கேட்டு பின் எனது தீர்ப்பை அளிப்பதாகத் தெரிவித்திருந்தேன். பத்திரிகை ஆசிரியரை விளக்கம் கேட்ட தற்கு, பின் வருமாறு விளக்கத்தை அனுப்பியுள்ளார்கள்:—

We wish to submit that the main thrust of the report is to highlight the difficulties experienced by the employees in getting their C.D. amount refunded. The heading of the report as well as the opening paragraphs bear out our intentions.

It was not our intention to malign any member of the Legislative Assembly or impute any motives to the members. We regret a portion of the report has given rise to an issue of privilege of the House and its members. We wish to make it clear it is not our intention to cast any reflection on members of the House nor impede them in the discharge of their normal duties.

We assure you we shall be more careful in future in the publication of such reports.

As a proof of our bona fides, we have already published a statement of Mr. R. Umanath, a member of the House in our issue dated 23rd, February 1978, a copy of which is enclosed for your kind attention.

அவையையோ அல்லது அவை உறுப்பினர்களையோ மக்கள் மத்தியில் எந்த விதமான ஆதாரமும் இன்றி களங்கம் கற்பிக்கும் வகையில் எழுதுவது வன்மையாகக் கண்டிக்க வேண்டியது தான்.

திரு. உமாநாத் அவர்கள் கொடுத்த மறுப்பையும் 23–2–1978 அன்றைய பத்திரிகையில் வெளியிட்டு இருக்கிறார்கள். மேலும், பத்திரிகையின் துணை ஆசிரியர் திரு. சேஷாத்திரி வருத்தம் தெரிவித்து இனிமேல் இவ்வாறு நிகழாதவாறு பார்த்துக் கொள்வதாகவும், களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற உள் நோக்கம் எதுவும் பத்திரிகைக்கு இல்லை என்றும் விளக்கம் கூறியுள்ளதால், இவ்வாறு இனி நடைபெறா வண்ணம் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையும், மற்ற பத்திரிகைகளும் கவனிப்பாக இருக்க வேண்டுமென்ற எச்சரிக்கை செய்து, மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்ற எனது முடிவை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையைப் பற்றி நான் உரிமை பிரச்னை கொடுத்திருக்கிறேன். அது மிகவும் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம். சட்டப் பிரச்னையானது அது. அதைப்பற்றி இது வரையில் எடுத்துக் கொள்ளாமல் இருப்பது அதன் முக்கியத்துவத்தைக் குறைப்பதாக இருக்கும். மிகவும் அவசியமான பிரச்னை. அதை எடுத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இன்னும் ஆய்வில் இருக்கிறது. அன்றைய தினம் உறுப்பினரிடத்தில் அறையிலே சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் இன்னும் வருகை தராததால் பிறகு தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. உச்சி : நான் ஒன்றைக் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

மத்திய சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை இந்தி மூலம் நடத்த மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக மத்திய வெளிவிவகார அமைச்சர் அறிவித்துள்ளது குறித்து.—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

'The External Affairs Minister Mr. A. B. Vajpayee said here last night that the Government of India had decided to conduct U. P. S. C. Examination through medium of Hindi. This is a serious and urgent